பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
03 01 2026 SATURDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் வளர்ச்சி தொடர்பான அம்சங்களுக்கு ஊடகங்கள் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.
- ஜவுளித்துறைக்கான உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ், புதிய விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு வரும் மார்ச் 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்றும் நடைபெறவுள்ளது
- திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உட்பட 17 கோவில்களில் பெருந்திட்ட வளாகப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி இன்று ஜப்பானின் Kavamura-வை எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சி தொடர்பான அம்சங்களுக்கு ஊடகங்கள் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஊடகங்கள் உண்மை செய்திகளை மட்டுமே வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அனைத்து மொழிகள் மற்றும் கலாச்சாரத்தின் பங்களிப்போடு, நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டும் என்பதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையாகும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

முன்னதாக, குடியரசு துணைத்தலைவருக்கு ஆளுநர் மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆளுநர் திரு. ஆர்.என் ரவி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

ஜவுளித்துறைக்கான உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ், புதிய விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு வரும் மார்ச் 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் தாக்கல் செய்வது தொடங்கப்பட்டதிலிருந்து, ஜவுளி நிறுவனங்களிடமிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை அடுத்து, இந்த நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அரசின் இந்த முடிவு, ஜவுளித் துறையில் முதலீட்டாளர்களுக்கு அதிகரித்து வரும் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதோடு, தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் காலஅவகாசம் அளிப்பதுடன், அதிகப்படியான பங்கேற்பை ஊக்குவிப்பதை அரசு நோக்கமாக கொண்டிருப்பதாக அந்த அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்று நடைபெறவுள்ளது.

தமிழகம் முழுவதும் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் இந்த முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளுக்குப் பின்னர் கடந்த 19ஆம் தேதி வெளியிட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ள விரும்புவோர் வரும் 18ஆம் தேதிக்குள் படிவங்களை அளிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 17ஆம் தேதி வெளியிடப்படவுள்ளது.

மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கக் கோரி நேற்றுவரை 7 லட்சத்து 17 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் சாலையை விட பள்ளத்தில் இருந்த 25 திருக்கோவில்களில் இதுவரை 14 கோவில்கள் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் உயர்த்தப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவிலில் 35 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பிக்கப்பட்டுள்ள வெள்ளித்தேர் வெள்ளோட்டத்தை நேற்று துவக்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமிழகத்தில் இதுவரை 3 ஆயிரத்து 967 குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வடமாநிலங்களில் மட்டுமே இருந்த பெருந்திட்ட வளாகம் என்ற திட்டத்தினை திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உட்பட 17 கோவில்களில் செய்து முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நெல்லையப்பர் கோவிலில் பூட்டிக்கிடந்த ஆயிரங்கால் மண்டபம் மீண்டும் திறக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழ்த் திரையுலகில் பிரபலமான திரைப்படமான 'ரத்தக்கண்ணீர்' அழியும் நிலையிலிருந்து மீட்கப்பட்டு, தற்போது இந்திய தேசிய திரைப்பட ஆவணக் காப்பகத்தின் தொகுப்பில் அதிகாரப்பூர்வமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

புனேவில் உள்ள இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி அதிகாரி திருமதி அபர்ணா சுப்பிரமணியம், தனது தனிப்பட்ட தொகுப்பிலிருந்த இந்தத் திரைப்படத்தின் பிலிம் சுருள்களை, தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் மேலாண் இயக்குநர் திரு. பிரகாஷ் மக்தூமிடம் நன்கொடையாக வழங்கினார்.

திருவாரூர் தங்கராசுவின் வசனத்தில் 1954ல் உருவான இப்படம், முற்போக்குச் சிந்தனையின் முகவரியாகத் திகழ்கிறது.

நடிகவேள் என்று அனைவராலும் அழைக்கப்பட்ட நடிகர் எம்.ஆர்.ராதா கதாநாயகனாக நடித்த இப்படம், சாதிய பாகுபாடு, மூடநம்பிக்கைகள் மற்றும் தேவையற்ற சடங்குகளுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததால் பிரலமானது.

தொழுநோய் குறித்த விழிப்புணர்வையும் இந்த திரைப்படம் ஏற்படுத்தியது.

"வரலாற்று ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் படத்தின் அசல் அச்சு எனப்படும் நெகட்டிவ், இந்தியா உட்பட சர்வதேச அளவில் எந்தவொரு காப்பகத்திலும் இதுவரை இல்லை என்று தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழகத்தின் மேலாண் இயக்குநர் திரு. பிரகாஷ் மக்தூம் கூறினார்.

>>>>><<<<<

*சேலம், குரும்பப்பட்டி வன உயிரின பூங்காவில், குளிர்கால வன உயிரின தூதுவர் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.*

*வனத்துறை ஏற்பாடு செய்துள்ள இத்திட்டத்தில் பணியாற்ற முன்வந்துள்ள மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 50 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாக இந்திய மீனவர்கள் 11 பேரை கைது செய்துள்ளதாகவும், அவர்களது விசைப்படகையும் பறிமுதல் செய்துள்ளதாகவும் அந்நாட்டு கடற்படை தெரிவித்துள்ளது.*

*கைது செய்யப்பட்ட மீனவர்கள், மயிலாடி மீன்வள ஆய்வ மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*வடதமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் மாநிலம் முழுவதும் அதிகாலையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*யுக்ரைனின் Kherson மாகாணத்தின் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 28ஆக அதிகரித்துள்ளது.*

*>>>>><<<<<*

*மெக்ஸிகோவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவில் 6 புள்ளி நான்காக பதிவாகியுள்ளது.*

*>>>>><<<<<*

*வடமாநிங்களில் கடுமையான குளிர் நிலவுவதால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

அஸ்ஸாம் – மிஸோரம் எல்லையில் 33 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களை அஸ்ஸாம் ஆயுதப்படையினர் பறிமுதல் செய்து, ஒருவரை கைது செய்துள்ளனர்.

>>>>><<<<<

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாரின் 296-வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள அவரது சிலைக்கு இன்று மாநில அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படவுள்ளது.

>>>>><<<<<

சென்னையில் நாளையும், நாளை மறுநாளும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு, அவர்களது வசிப்பிடத்திற்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது

>>>>><<<<<

பராமரிப்பு பணிகள் காரணமாக, நாளை சென்னை கடற்கரையிலிருந்து இயக்கப்படும் சிறப்பு ரயில் செங்கல்பட்டுக்கு பதிலாக, சிங்கப்பெருமாள் கோவில் வரை மட்டுமே இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவல்லி நேற்று வழங்கினார்.

>>>>><<<<<

திண்டிவனம் அருகே, போதை மாத்திரைகள் மற்றும் போதை ஊசிகளை விற்பனை செய்த இளைஞர் ஒருவரை, காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் புண்ணிய கோட்டீஸ்வரர் ஆலயத்தில் ஆருத்ரா-வை ஒட்டி, சிவகாமி சமேத நடராஜ பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

>>>>><<<<<

அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி இன்று ஜப்பானின் Kavamura-வை எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

ஆடவர் ஹாக்கி இந்தியா லீக் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தமிழக அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

ராஞ்சியில் நடைபெறவுள்ள மகளிர் பிரிவு ஆட்டத்தில், தில்லி - சூர்மா அணிகள் மோதுகின்றன.

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல்ஆட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு, Benoni-யில் தொடங்குகிறது.

>>>>><<<<<

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் சார்பில், திருச்சி மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று பெரம்பலூரில் தொடங்குகிறது.

>>>>><<<<<